துணை மருத்துவப் படிப்புகளுக்கு

‘நீட்’ தேர்வை கட்டாயமாக்கி அறிவித்துள்ளதை உடனே கைவிடுக!

பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

சென்னை, ஜன.25

துணை மருத்துவப் படிப்புகளுக்கு நீட் தேர்வை கட்டாயமாக்கி அறிவித்துள்ளதை உடனடியாக கைவிட வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

துணை மருத்துவப் படிப்புகளுக்கு நீட் தேர்வை கட்டாயமாக்கி தேசிய துணை மருத்துவம் மற்றும் சுகாதாரப் பணிகள் ஆணையம் (NCAHP) அறிவித்துள்ளதை கைவிட வலியுறுத்தி இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

தன்னிச்சையான முடிவால் பாதிப்பு!

அக்கடிதத்தில், தேசிய துணை மருத்துவம் மற்றும் சுகாதாரப் பணிகள் ஆணையம் (NCAHP), வரவிருக்கும் கல்வியாண்டு முதல் இளங்கலை பிசியோதெரபி (B.PT) மற்றும் இளங்கலை ஆக்குபேஷனல் தெரபி (B.OT) ஆகிய இரண்டு பட்டப்படிப்புகளில் சேருவதற்கு, தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வில் (NEET) பங்கேற்பதைக் கட்டாயமாக்கியுள்ளது என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள் இந்த அவசரமான மற்றும் தன்னிச்சையான முடிவினால், பல்வேறு பாதிப்புகள் ஏற்படும் என்பதால் அதனை உடனடியாகத் திரும்பப்பெறப்பட வேண்டுமென்று தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இளநிலை மருத்துவப் படிப்பு (MBBS) சேர்க்கைக்கான நீட் தேர்வை, தமிழ்நாடு தொடர்ந்து உறுதியாக எதிர்த்து வருகிறதென்றும், மற்ற துணை மருத்துவப் படிப்புகளுக்கும் நீட் தேர்வு கட்டாயமாக்கப்படும் அபாயம் இருப்பதாகவும் தொடர்ச்சியாக எச்சரித்து வருகிறதென்றும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள் துரதிர்ஷ்டவசமாக, தமிழ்நாட்டின் அச்சங்கள் இன்று உண்மையாகிவிட்டன என்றும் வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் அனைத்து துணை மருத்துவப் படிப்புகளுக்கும் (Allied Health Care Courses-AHCs) நீட் தேர்வைக் கட்டாயமாக்கும் ஒரு பெரிய திட்டத்தின் முதல்படியாக, இரண்டு படிப்புகளுக்கு நீட் தேர்வு பரிந்துரைக்கப்படுவதாக ஒன்றிய சுகாதார அமைச்சகத்தின் சமீபத்திய தகவல்களிலிருந்து தெளிவாகத் தெரிகிறதென்று தெரிவித்துள்ளார். அரசமைப்புச் சட்டப்படி சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய இரு துறைகளுக்கும் பொறுப்பான மாநில அரசுகளுடன் முறையான கலந்தாலோசனைகளை செய்யாமல் மேற்கொள்ளப்படும் இந்த முயற்சி மாநில அரசால் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று தமது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் தெளிவுபடக் குறிப்பிட்டுள்ளார்.

‘நீட்’ தேர்வினால் மாணவர்களுக்கு மனஅழுத்தம்!

நாங்கள் ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருந்தது போல, நீட் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டதால், 12,000 எம்.பி.பி.எஸ் இடங்களுக்குப் போட்டியிட 1.40 இலட்சம் மாணவர்கள், பயிற்சி வகுப்புகளுக்கு அதிக கட்டணம் செலுத்தி நீட் தேர்வை எழுத வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளதுடன் அவர்களது குடும்பத்தினருக்குத் தேவையற்ற செலவு, மன அழுத்தம் மற்றும் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் பள்ளித் தேர்வுகளில் காட்டும் செயல்திறனைப் பயனற்றதாக்கிவிட்டதாகவும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் சாடியுள்ளார்.

இந்தத் தவறான நடைமுறையை துணை மருத்துவப் படிப்புகளுக்கும் விரிவுபடுத்துவது என்பது நிலைமையை மேலும் மோசமாக்கும் என்று எச்சரித்துள்ள அவர், தமிழ்நாட்டில் துணை மருத்துவப் படிப்புகளுக்கான இடங்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்திற்கும் அதிகமாகும் என்றும், இந்த இடங்களுக்குச் சேர விரும்பும் இலட்சக்கணக்கான மாணவர்கள், எம்.பி.பி.எஸ் படிக்க விரும்பும் மாணவர்களை விட மிகவும் பின்தங்கிய சமூகப் பொருளாதாரப் பின்னணியைக் கொண்டவர்கள் என்றும், இது ஏழைக் குடும்பங்களை நீட் பயிற்சிக்குச் செலவழிக்கக் கட்டாயப்படுத்தும் ஒரு பெரும் அநீதியாகும் என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நீட் தேர்வில் பங்கேற்றிருக்க வேண்டுமென்பதை ஒரு தகுதியாக நிர்ணயித்திருப்பது என்பது நடைமுறைக்கு ஒவ்வாதது என்று சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், உலகளவில், ஒரு தேர்வில் தேர்ச்சி பெறுவதன் மூலமோ அல்லது அதில் அதிக மதிப்பெண் பெறுவதன் மூலமோ கல்வித்தகுதி வரையறுக்கப்படுகிறது என்றும், ஒரு நுழைவுத் தேர்வில் பங்கேற்றிருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துவது சரியானதல்ல என்றும், இது நீட் தேர்வைநாடுமுழுவதும்விரிவுபடுத்துவதற்காக மட்டுமே வடிவமைக்கப்பட்டதாகத் தெரிகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

இதனால் லட்சக்கணக்கானோர் நீட் பயிற்சியை நாடும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு, இறுதியில் ஏழைக் குடும்பங்களின் செலவில் நீட் பயிற்சி மையங்கள் நன்றாக இலாபம் பெறும் என்றும் குறிப்பிட்டுள்ளார். எம்.பி.பி.எஸ் சேர்க்கைக்கான தகுதியாக நீட் (NEET) மதிப்பெண் நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், தகுதி மதிப்பெண்கள் (cut-offs) படிப்படியாகக் குறைக்கப்பட்டு, கிட்டத்தட்ட பூஜ்ஜியத்திற்கு இணையாகக் கொண்டு வரப்பட்டுள்ளதால், இது மாணவர்களின் தரம் குறித்த வாதத்தை முற்றிலும் அர்த்தமற்றதாக்குகிறது என்பதைச் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

உத்தரவை மறு பரிசீலனை செய்க!

இந்தச் சூழலில், துணை மருத்துவ படிப்புகளுக்கான சேர்க்கை நடைமுறைகள் மாநில அரசின் அதிகார வரம்பிற்குள்ளேயே நீடிக்கவேண்டும் என்பதும், இந்தச் சேர்க்கைக்கு நீட் தேர்வினை விலக்கி வைக்கப்பட வேண்டும் என்பதும் மிகவும் அவசியமாகும். எனவே, இந்த உத்தரவை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்றும், இந்த நடவடிக்கையை உடனடியாகக் கைவிடுமாறும் தேசிய துணை மருத்துவ ஆணையத்திற்கு (NCAHP) அறிவுறுத்தவேண்டும் என்றும் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார். மேலும் இந்த விஷயத்தின் அவசரத் தன்மையைக் கருத்தில் கொண்டு, இந்தியப் பிரதமர் அவர்களின் விரைவான தலையீட்டை தாம் எதிர்பார்ப்பதாகவும் தமிழ்நாடு முதலமைச்சர் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

தேர்தலை வைத்து எந்தத் திட்டமும் கழக ஆட்சி செய்வதில்லை! பொங்கலுக்கு

கரும்பை நான்காக வெட்டி கொடுத்தது அ.தி.மு.க. ஆட்சி!

பேரவையில் அமைச்சர் அர.சக்கரபாணி பதிலடி!

சென்னை, ஜன. 25-

சட்டப் பேரவையில் பதிலளித்த அமைச்சர் அர.சக்கரபாணி, பொங்கலுக்கு கரும்பை நான்காக வெட்டி கொடுத்தது அ.தி.மு.க. ஆட்சி என்ற குறிப்பிட்டார்.

இதுகுறித்து, பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

ஆர்.பி. உதயகுமார்: *இந்த ஆண்டு, 2026 ஆம் ஆண்டு தேர்தலும் வருகிறது, பொங்கல் பரிசு அறிவிப்பும் வருகிறது. ஆக, தேர்தல் வந்தால்தான் இந்த அரசுக்கு மக்கள் ஞாபகம் வருமா என்று தமிழ்நாட்டு மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.*

அமைச்சர் மு.பெ. சாமிநாதன்: *உறுப்பினருக்கு ஒன்றை ஞாபகப்படுத்துகிறேன். அ.தி.மு.க. அரசு நடைபெற்றபொழுது பள்ளி மாணவர்களுக்கு வழங்கிய முட்டை எல்லாம் ரத்து செய்யப்பட்டது. விவசாயிகளுக்கு கொடுத்த கட்டணமில்லா மின்சாரம் ரத்து செய்யப்பட்டது. அதற்கு பிறகு தேர்தல் வந்தபோதுதான் அது வந்தது. கண் கெட்ட பிறகு தான் சூரிய நமஸ்காரம் செய்தார்கள் இவர்கள் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.*

அமைச்சர் அர. சக்கரபாணி: *பொங்கல் பரிசு தொகுப்பு கொடுத்தோம் என்று பேசினார்கள். மதுரை மாவட்டம், மேலூரில் நிறைய கரும்பு விளைகிறது. ஒரு கரும்பை நான்காக வெட்டி யாராவது பொங்கல் கொண்டாட முடியுமா? சரித்திர சாதனை படைத்தது நீங்கள் தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், எங்கள் முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து முழு நீள கரும்பு கொடுத்திருக்கிறார்கள். உங்கள் ஆட்சியில் ஒரு கரும்பை நான்காக வெட்டி கொடுக்கவில்லையென்று சொல்லுங்கள் பார்க்கலாம். கொடுத்தீர்களா, இல்லையா? தமிழ்நாட்டு மக்கள் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) ஒரு கரும்பை நான்காக வெட்டி பொங்கலுக்குக் கொடுத்தால் எப்படி பொங்கல் கொண்டாட முடியும். (குறுக்கீடுகள்)*

அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஒரு கரும்பை மூன்றாக, நான்காக வெட்டித் துண்டா கொடுத்தார்களா, இல்லையா என்பதை ஒப்புக் கொள்கிறார்களா, இல்லையா என்பதை மட்டும் சொல்லச் சொல்லுங்கள்.

அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன்: *நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே கொரோனாவுக்காக அனைத்து ரேஷன் கார்டுகளுக்கும் ரூ.4,000/- கொடுத்தார்கள். அதேபோல, 2023 பெருமழை பெய்தபோது சென்னை, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள அத்துனை ரேஷன் கார்டுகளுக்கும் ரூ.6,000/- கொடுத்தார்கள். அதனால், கடந்த ஆண்டுதான் ரூபாய் கொடுக்க முடியாமல் போனது, அதற்கு நிதிநிலை ஒரு காரணம். ஆகவே, தேர்தலை வைத்து எந்தத் திட்டமும் எங்கள் தலைவர் செய்வது கிடையாது. கொரோனாவால் தாய், தகப்பனை இழந்த பிள்ளைகளுக்கு ஒவ்வொருவர் பெயரிலும் ரூ.5 இலட்சம் account-ல் போட்டிருக்கிறோம். அதேபோல, ஒரு தாய், ஒரு பெற்றோரை இழந்தவர்களுக்கு ரூ.3 இலட்சம் கொடுத்தோம். அவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கிறோம். ஆகவே, நாம் செய்கிற அன்புக் கரங்கள் திட்டமாக இருந்தாலும் தேர்தலை வைத்து எந்தத் திட்டமும் இந்த ஆட்சி செய்வதில்லை. எங்களுடைய தலைவர், நம்முடைய மக்கள் நலனுக்காகத்தான் செய்கிறார்கள்.*

அமைச்சர் அர. சக்கரபாணி: கொரோனா காலத்தில் எல்லோருமே ஊரை விட்டு, வீட்டைவிட்டு வெளியே வரக் கூடாது என்று சொல்லி ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. நீங்கள் ஆட்சியில் இருக்கும்போது பிறப்பித்தீர்கள். அப்போது எங்கள் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் ஆட்சியில் இருந்தீர்கள். அப்போது என்ன சொன்னார், மக்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு குடும்பத்திற்கு ரூ.5,000/- கொடுங்கள் என்று சொல்லி சட்டமன்றத்திலும் பேசினார்கள்; மக்கள் மன்றத்திலும் பேசிப் பார்த்தார்கள். நீங்கள் ஆயிரம் ரூபாய் கொடுத்தீர்கள். மறுபடி பல முறை கேட்டுப் பார்த்தார்கள். ஆயிரம் ரூபாய்தான் கொடுத்தீர்கள். கொடுக்கவில்லை. பல முறை சொல்லிப் பார்த்தார்கள். ஆனால், முதலமைச்சர், எங்கள் தலைவர் என்ன சொன்னார்; நீங்கள் தரவில்லை, நாங்கள் ஆட்சிக்கு வந்தபின்பு முதல் கையெழுத்து போட்டு, ரூ.5,000/- உங்களை கொடுக்கச் சொன்னேன், நீங்கள் கொடுக்கவில்லை. ஆயிரம் ரூபாய்தான் கொடுத்தீர்கள். ரூ.4,000/- நான் கொடுப்பேன் என்று சொல்லி முதல் கையெழுத்து போட்டு (மேசையைத் தட்டும் ஒலி) 2 கோடியே 9 இலட்சம் பேருக்கு ரூ.4,000/- கொடுத்தார்கள். அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 14 வகையான மளிகைப் பொருட்களையும் கொடுத்தவர், இன்றைய முதலமைச்சர் தளபதி அவர்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அது தேர்தலுக்காக நாங்கள் கொடுக்கவில்லை. அப்போது 2021-ல் தேர்தல் நடக்கவில்லை. சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றியவர்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

ஆவடி தொகுதி திருநின்றவூரில்

ரூ.2 கோடி 90 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு திட்ட பணிகள்!

அமைச்சர் ஆவடி சாமு.நாசர் தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர் ஜன 25:

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருநின்றவூர் நகராட்சி பல்வேறு பகுதிகளில் 2 கோடி 90 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு திட்ட பணிகளை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்

திருநின்றவூர் நகராட்சி 24 வது வார்டில் 15 ஆவது மாநில மானியம் நிதிலிருந்து 75 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் கட்டிட கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா,

27 ஆவது வார்டு 15 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் இந்திரா நகர் பூங்காவில் நடைபாதை மற்றும் மேம்பாட்டு பணிகள் அடிக்கல் நாட்டு விழா

27 வது வார்டு இந்திரா நகர் சீனிவாசா நகர் பகுதியில் 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பிரதான சாலை அமைக்கும் பணி

9 வார்டு 6 மாநில நிதி குழு மானிய நிதியிலிருந்து 1 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பிரகாஷ் நகரில் சமுதாயக் கூடம் கட்டுவதற்கான பணிகளை தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சாமு.நாசர் அடிக்கல் நாட்டில் பணிகளை தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார் இதனை தொடர்ந்து திருநின்றவூர் நகராட்சி சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார் நிகழ்ச்சியில் நகர் மன்ற தலைவர் உஷாராணி ரவி நகராட்சி ஆணையர் ஜீவிதா மாவட்ட அவைத் தலைவர் ம.ராஜி தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், திருநின்றவூர் நகரக் கழக செயலாளர் தி.வை.ரவி மற்றும் கழக நிர்வாகிகள் கவுன்சிலர்கள் சி.கமலக்கண்ணன், நாகராஜ், ரவி, பாபு, குணாசேகரன், பி.எல்.ஆர். யோகா, தங்கராஜ், சரவணன் சசிகலா உஷாராணி வெங்கடேசன், சலீம், மோகனகிருஷ்ணன், பால்ராஜ் சுரேஷ், கோபால், ராஜன், மு.பெ.மகேஷ்குமார், மேகநாதன், கருணாநிதி , முரளி பாஸ்கரன், செந்தில்வேல், சுகுமார் , ஜீவானந்தம் , பாபு , பூமணி, ஜெயக்குமார், ராதா , சந்தோஷ் குமார் , சுதர்சனம் , கார்த்திக் , பிரசன்னா, மகேஷ்குமார் தங்கமணி சுஜாதா, மற்றும் நகராட்சி நிர்வாக அதிகாரிகள் பொது மக்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர் .

சோழிங்கநல்லூர் வார்டுகளில் ரூ.2,58 கோடியில்

3 புதிய மகளிர் உடற்பயிற்சிக் கூடங்கள் - வார்டு அலுவலகம்!

மேயர் ஆர்.பிரியா திறந்து வைத்தார்!

சென்னை,ஜன.25-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, மேயர் திருமதி ஆர்.பிரியா, சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட வார்டுகளில் ரூபாய் 2.58 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 3 புதிய மகளிர் உடற்பயிற்சி கூடங்கள் மற்றும் வார்டு 198க்கான அலுவலகத்தினையும் திறந்து வைத்தார்.

மேயர் , சோழிங்கநல்லூர் மண்டலத்தில், மாநகராட்சியின் மூலதன நிதியில், வார்டு-196, கண்ணகி நகர், 12ஆவது பிரதான சாலையில் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக மகளிர் உடற்பயிற்சிக் கூடம், வார்டு-199, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு இ-36 சாலையில் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மகளிர் உடற்பயிற்சிக் கூடம் மற்றும் வார்டு-194, ஈஞ்சம்பாக்கம், வி.ஜி.பி. லேஅவுட் பார்க்கில் ரூபாய் 45 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மகளிர் உடற்பயிற்சிக் கூடம் என 3 மகளிர் உடற்பயிற்சிக் கூடங்களை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

இதன் தொடர்ச்சியாக, காரப்பாக்கம் கங்கை அம்மன் கோவில் தெருவில் மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ் ரூபாய் 1.33 கோடி மதிப்பீட்டில் வார்டு-198ற்கான அலுவலக கட்டடத்தினைத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், மண்டலக்குழுத் தலைவர் வி.இ.மதியழகன், மாமன்ற உறுப்பினர்கள் க.சங்கர், திருமதி க.விமலா கர்ணா, லியோ என். சுந்தரம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.